Endt. Rc. No. 1150/A1/2021 dt: 10/05/2023

copy forwarded.

Pension Pay Officer
Pension Pay Office
Chennai-600 035

10/05/23

To

Tmt. N. Arathi,

Junior Assistant,

Pension Pay Office,

Chennai-35

Scanned with CamScanner

கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்,
தமிழ்நாடு, சென்னை -35.
முன்னிலை: திரு.க.விஜயேந்திர பாண்டியன் இ.ஆ.ப.

செ.மு.ந.க.எண்.29562/2019/எம்1 நாள்.08.05.2023

| | | |
|---|---|---|
| பொருள் | பணியமைப்பு - கருவூலம் மற்றும் கணக்குத் துறை - சென்னை ஓரலகு - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி.N.ஆரத்தி, இளநிலை உதவியாளர், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை - பணிவரன்முறை ஆணை வழங்கல் | |
| பார்வை | 1. | அரசாணை (நிலை) எண்.18, தொ.(ம).வே.வா.(க்யூ1)த் துறை, நாள்.23.01.2020 |
| | 2 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.29562/2019/எம்1 நாள்.21.01.2021 |
| | 3 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் கடித ந.க.எண். 29562/2019/எம்1 நாள்.02.06.2022 |
| | 4 | அரசாணை (3ப) எண்.15 நிதி (க.க.2)த் துறை, நாள்.19.02.2023 |

********

ஆணை:

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னையில் சிறப்புநிலை அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திரு.எம்.நடராஜன் அவர்கள் 23.02.2019 அன்று பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்ததை தொடர்ந்து, அவரது வாரிசுதாரரான மகள் செல்வி.N.ஆரத்தி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கிடுமாறு விண்ணப்பித்ததைத் தொடர்ந்து அவரது கல்வித் தகுதியின் அடிப்படையில் கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் பார்வை 2-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, செல்வி.N.ஆரத்தி (காலஞ்சென்ற திரு.எம்.நடராஜன், சிறப்புநிலை அலுவலக உதவியாளர், சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை என்பவரின் வாரிசுதாரர் மற்றும் மகள்) என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு (1)- ன் படி தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர், கருவூல மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னையில் இளநிலை உதவியாளராக 21.01.2021 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார்.

Scanned with CamScanner

தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாக பணிபுரிந்து வரும் நிலையில் அன்னாரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், செல்வி.N.ஆரத்தி, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 21.01.2021 முற்பகல் முதல் அவர் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகுட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதன் மூலம் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின் அவற்றை விதிகளின்படி, பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

மேலும், தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின் படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

இதனை தொடர்ந்து தனியரின் பணிவரன்முறை குறித்து உரிய பதிவுகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்

ஓம்/– க.விஜயேந்திர பாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்

பெறுநர்:

1. செல்வி.N.ஆரத்தி, இளநிலை உதவியாளர்,
   ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம்,,
   சென்னை
   (உரிய வழிமுறையாக)
2. ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்,
   ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம்,
   சென்னை.
3. இருப்புக் கோப்பு // உதிரி

// ஆணைப்படி அனுப்பலாகிறது //

கண்காணிப்பாளர்
8/10/2023.

Scanned with CamScanner